தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருய	திருவள்ளுவர் யாண்டு உயயஎ நள, வைகாசி (1976 — மே — ஜூன்)	மலர் உ

"சிலப்பதிகாரத்தில் கண்ணன்"

ஏ. ஏகாம்பரநாதன்,

தொல்லியல்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

புவியியற்படி ஐவகை நிலங்களாகப் பிரிக்கப்பட்ட பண்டைத் தமிழகத்தில், முல்லை நில மக்கள் திருமாலைத் தங்கள் நிலத்திற்குரிய கடவுளாக வழிபட்டு வந்துள்ளனர் முல்லை நிலத் தெய்வமாகிய திருமால், வடமொழியாளர் பண்பாட்டுக் கலப்பினால் அவர்கள் வழிபட்டு வந்த விஷ்ணுவுடன் ஒன்றாக இணைக்கப்பட்டு விட்டாரென்பது அறிஞர்பலரது கருத்துரையாகும் இவ்விணைப்பின் பயனாகவே தமிழகத்தில் விஷ்ணுவின் பல்வேறு அவதாரங்களைப் பற்றிய செய்திகள் நன்கு பரவியிருக்க வேண்டும். இப்பகுதியில் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள நீலமேனி நெடியோனது அவதாரமாகிய கண்ணனையும். அக் கண்ணன் வழிபாட்டினையும் பற்றிய செய்திகளைக் காண்போம்.

கண்ணனும், பலராமனும் :

சங்க இலக்கியங்களாகிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூற்களில் ஓரிரு குறிப்புக்களைத் தவிர, எஞ்சியவை அனைத்திலும் கண்ணன், பலராமனது தம்பியாகக் கூறப்பட்டுள்ளான். இவ்விருவருக்கும் கோயில்கள் பல எழுப்பப்பட்டமையையும் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறியவருகிறோம். சிலப்பதிகாரத்திலும் கண்ணனும், பலராமனும் ஒன்றாக வழிபடப்பட்டு வந்த செய்தி சில பகுதிகளில் காணப்படுகிறது. ஆனால் மிக்கவாறான பகுதிகளில் கண்ணனுக்குத் தனிச்சிறப்பு கொடுத்துள்ளமையைக் காணலாம். குறிப்பாக சங்க இலக்கியங்

களில் காணப்படாத கண்ணனது பிறப்பு, திருவிளையாட்டுச் செய்திகள், தனிவழிபாடு ஆகியவை சிலப்பதிகாரத்தில் தான் அதிகமாக இடம் பெற்றுள்ளன எனவே சிலப்பதிகார காலத்தி லிருந்துதான் தமிழகத்தில் கண்ணன் அவதாரத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதெனலாம்.

கண்ணனும், கோவலனும்:

தான் இழந்த பொருளினை ஈட்டும் பொருட்டு மதுரைக்குத் தன் துணையுடன் சென்ற கோவலனுக்கு ஆயர் முதுமகளாகிய மாதரி அடைக்கலம் கொடுத்தோம்புகிருள். இம்மாதரியின் இல்லத்தில் கோவலனுக்கு வேண்டிய அறுசுவை உணவினைக் கண்ணகி படைத்தூட்டுவதைக் கண்டு மகிழ்ந்த மாதரியும், ஐயையும், 'பண்டு ஆயர்பாடியில் அசோதையின் மகனுகப் பிறந்த கண்ணபிரானைப்போன்று கோவலன் காட்சியளிக்கிருன் என்றும், அக்கோவலனுக்கு நல்லமுதூட்டும் நங்கை, ஆயர் குலத்தில் தோன்றி கண்ணனுக்குத் துணையாகத் திகழ்ந்த நப்பின்னை போன்று காட்சியளிக்கிருள்' என்றும் கூறுகின்றனர். (சிலம்பு. 16 : 45-52) அதாவது கண்ணனும், நப்பின்னையும் கருத்தொருமித்த காதலர்களாக விளங்கியது போன்று கோவல னும், கண்ணகியும் திகழ்ந்தனர் என்பது பொருளாகும். ஈண்டு கோவலனைக் கண்ணனுக்கு ஒப்பிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

கண்ணன் திருவிளையாட்டு:

சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவைப் பகுதி முழுவதும் கண்ணனது சிறப்பினைக் கூறுவதாக அமைந்துள்ளது கோவலன் கொலை செய்யப்படும் முன்னர், ஆயர்பாடியில் தீ நிமித்தங்கள் ஏற்படவே, மாதரி ஆயர் குலச் சிறுமிகளைக் கண்ணகியின் மனம் மகிழுமாறு கண்ணபிரானது இளமைப் பருவத்துச் செயல்களைக் குரவைக் கூத்தாகப் பாடுமாறு பணிக்கி ருள் அப்போது ஆயர் சிறுமியர் எழுவர் தங்கள் கைகளைக் கோத்துக்கொண்டு கண்ணனது திருவிளையாட்டுகளில் ஒரு சிலவற்றைக் குரவைக் கூத்தாகப்பாடி மகிழ்கின்றனர். இப்பகுதி யில் கண்ணன் ஆவினங்களை மேய்த்து வந்த காலை, விளவின் கனிகளை உதிர்ப்பதற்காகக் கன்றினைக் குறுந்தடியாகப் பயன் படுத்திய செய்தியும், கொல்லைப்புறத்தில் குருந்த மரமாக வந்து நின்ற அசுரனை வெட்டி வீழ்த்தியமையும், முதலாவதாக இடம் பெற்றுள்ளன. அடுத்து தொழுனை (யமுனை) நதிக் கரையில்

கன்னியர் நீராடுங்கால் அவர்களது ஆடையினைக் கண்ணன் கவர்ந்து சென்றமையும், தனது சக்கரப்படையால் சூரியனை மறைத்த செய்தியும், பலராமன், நப்பின்னை ஆகியோருடன் எருமன்றத்தாடிய குரவைக் கூத்தினைப் பற்றிய செய்தியும் காணப்படுகின்றன. இவையன்றி கண்ணபிரான் இளமைப் பருவத்தில் அசோதைப் பிராட்டியாரது கடைக்கயிற்றால் கட்டுண்டமையும், ஆயர்பாடியில் வெண்ணெய் திருடி உண்ட செய்தியும், வாசுகியை நாணாக்கி, மேருவினை மத்தாக்கிப் பாற் கடலைக் கடைந்தமையும், பாரதப் போர் நிகழுமுன் பஞ்சவர்க் காகத்தூது சென்றமையும், கஞ்சனார் செய்த வஞ்சங்களனைத்தும் பொடிபடச் செய்த செய்தியும் இடம் பெற்றுள்ளன.

மேற்கூறப்பட்டுள்ள செய்திகளனைத்தும் வடமொழி இலக்கி யங்களிலும், புராணங்களிலும் காணப்படுகின்றன. துவரையம் பதியில் தோன்றிய கண்ணன் வழிபாடு காலப்போக்கில் தமிழகத்தை வந்தடைந்து, சிலப்பதிகார காலத்தில் சிறந்து விளங்கியதால் தான் கண்ணனது திருவிளையாட்டுச் செய்திகள் இக்காப்பியத்தில் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பது அறியற்பாலதாகும்

கண்ணனது திருநடனங்கள் :

கடலாடுகாதையில் கண்ணபெருமான் ஆடிய பத்துவகை நடனங்களுள் ஒரு சிலவற்றைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. முக்கியமாக கஞ்சமன்னனால் ஏவப்பட்ட வஞ்சக யானையின் கொம்பினை ஒடித்துக் கண்ணன் ஆடிய அல்லியம் என்னும் ஆடலும், வாணன் என்னும் அரக்கனை வெல்லுதற்பொருட்டு மல்லனாகக் கண்ணன் ஆடிய மல்லாடலும், காமனது மகன் அனிருத்தன் பாணாசுரனது மகள் உழையின்மீது காதலுற்று சிறைபிடிக்கப்பட்டபோது, அவனை மீட்டற்பொருட்டு மாயவன் ஆடிய குடம் என்னும் நாட்டியமும் கூறப்பட்டுள்ளன. சிலப்பதி காரத்தில் இயலுக்கும், இசைக்கும் மட்டுமின்றி நாட்டியத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை சிவன், கண்ணன், முருகன், காமன், கொற்றவை, திருமகள், இந்திராணி ஆகியோர் ஆடிய பல்வேறு நடனங்களைப் பற்றிக் கூறுவதி லிருந்து நன்கறியலாம். மேலும், பண்டைத் தமிழர் நாட்டியத் தின மீது கொண்டிருந்த ஆர்வத்தினையும் இப்பகுதி இனிது அறிவுறுத்துகிறது.

கண்ணனும், நப்பின்னையும் :

துவாரகாபுரியில் கண்ணன் ஆயர் குலமகள் இராதையின் மீது காதல் கொண்டு பல்வேறு திருவிளையாட்டுகள் புரிந்த வரலாறு வடமொழிப் புராணங்களில் பரவலாகக் காணக்கிடக்கின்றன. ஆனால் தமிழிலக்கியங்களில் இராதைக்குப் பதிலாக நப்பின்னை என்னும் ஆயர் மகள் கண்ணனுக்குத் துணையாக்கப் பட்டிருக்கிறாள். சிலப்பதிகாரத்தில் பலராமனும், கண்ணனும், நப்பின்னையும் தொழுனை ஆற்றங்கரையில் ஆடிய குரவைக்கூத்து பற்றிய செய்தி பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. இக்காப்பியத்தில் கண்ணனும், பின்னையும் கருத்தொருமித்த காதலராகப் படைக்கப்பட்டிருக்கின்றனர். வடமொழியாளர் தொடர்பால வந்த கண்ணனுக்குத் தமிழக முல்லை நில மக்கள் நப்பின்னை என்னும் தமிழ் மகளைத் துணையாக்கியுள்ளமை இந்தியப் பண்பாட்டின் ஒருமைப் பாட்டிற்குச் சான்றாக உள்ளது மேலும் ஒரு திறத்தாரால் வழிபடப்பட்டுவந்த தெய்வம் மற்றொரு பிரிவினரது வழிபாட்டிற்கு உரியதாக மாறும்போது, இரு திறத்தாரது தெய்வங்களுக்கும் திருமணம் அல்லது வேறு ஏதாவது ஒரு தொடர்பினை ஏற்படுத்துவது பண்டைய மரபாகும். இவ்வாறே பண்டைத் தமிழரும் கண்ணனுடன் முல்லை நில ஆயர் மகளாகிய நப்பின்னையைத் தொடர்பு படுத்தியிருத்தல் வேண்டும்.

கண்ணனும் மூவேந்தரும் :

மன்னனை இறைவனின் பிரதிநிதியெனப் பண்டைக் கால மக்கள் கருதி வந்தனரென்பதற்கு உலகின் பல்வேறு நாகரிகங்களிலும் சான்றுகள் உள்ளன. இதுபோன்று பண்டைத் தமிழ் மக்களும் அரசனை இறைவனாகவோ அல்லது இறைபண்புடையவனாகவோ கருதியிருக்கின்றனர். இதனால்தான் மன்னன் வாழும் அரண்மனையும், இறைவனுக்குக் கட்டப்பட்ட எழுநிலை மாடமும் 'கோயில்' என்னும் பொதுப் பெயர் பெற்றுள்ளது இளங்கோவடிகள், ஆய்ச்சியர் குரவையில் கண்ணபெருமானே முடியுடைய மூவேந்தர்களாக உள்வரிக்கோலம் பூண்டு ஆட்சி புரிந்தான் எனப் போற்றிப்புகழ்ந்துள்ளார். "பொதிகை மலையில் கிடைக்கும் சந்தனத்தையும், முத்தினையும் ஆரங்களாகப் புனைந்து பாண்டி நாட்டை ஆண்ட பாண்டியன் யாவன் எனின், கோகுலத்தில் குருந்த மரத்தை அழித்த கண்ணபிரானாவான்.

பொன்னிமயக் கோட்டினில் புலி இலச்சினை பொறித்த வளவர் கோனும், திகிரிப் படையினைத் தன் கையில் கொண்ட கார்மேக வண்ணனும் ஒருவரேயாவர். பெரும் படையுடன் கடலிற் சென்று எதிரியின் கடம்ப மரத்தை வெட்டி வீழ்த்தி வெற்றி வாகை சூடி வஞ்சியை ஆண்ட சேரமன்னனும், திருப்பாற்கடலைக் கடைந்த செங்கண் நெடுமாலேயாகும். '' எனக் கூறியிருப்பதி லிருந்து அக்கால மக்கள் இறைவனையும், மன்னனையும் ஒன்றெனக் கருதினர் என்பது புலனாகும்.

கண்ணன் வழிபாடு சிறக்கக் காரணம்:

சிலப்பதிகார காலத்தில் கண்ணன் வழிபாடு சிறந்திருந்த தற்கு முக்கிய காரணம், வட நாட்டினின்று வந்த கண்ணன் வழிபாடு தமிழகத்தில் திருமாலுடன் இணைக்கப்பட்டதேயாகும். துவாரகாபுரியில் கண்ணன் ஆயர் குலத்தில் பிறந்தவன் என்று கருதப்பட்டதால், தமிழகத்தில் முல்லை நில மக்களாகிய ஆயர் களும் கண்ணனுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். இதன் அடிப்படையில் தான் கண்ணனது துணையாகிய இராதையின் இடத்தில் நப்பின்னை இடம் பெற்றுள்ளாள். மேலும் அக்காலத் தமிழர் வீரத்திற்கும், காதலுக்கும் முக்கியத்துவம் கொடுத் துள்ளனர். எனவேதான், தமிழ்க் கடவுளாகிய முருகனை வீரனாக வும், அழகனாகவும், வள்ளிக் குறத்தியின் காதலனாகவும் தமிழர் உருவாக்கி வழிபட்டுள்ளனர். இது போன்று கண்ணனும் பல அசுரர்களை அழித்த வீரனாகவும், நப்பின்னையின் காதலனாகவும் விளங்கியதால்தான் முல்லை நில மக்கள் விஷ்ணுவின் அவதாரங் களுள் கண்ணனுக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வழிபடலாயினர் என்பது அறியற்பாலதாகும்.

" உவமையின் தோற்றமும் - தொன்மையும் " - ஓர் ஆய்வு.

பேராசிரியர். கி. கோதண்டபாணி, M. A., B. O. L.,

தோற்றுவாய் :

மொழிக்கு அணி செய்யும் உறுப்புக்களில் தலைசிறந்தது செய்யுளாகும். இதனை யாப்பு என்பர். யாப்பிற் கலந்து அணி செய்வதே அணியாகும். இவ்வணி பற்றிய நூல்களை விதிப் படுத்தி வகுத்துக் கூறுவது அணியிலக்கணம். தமிழிலக்கணத்தை எழுத்து, சொல், பொருள் என மூன்றாகவே கூறுகிறது தொல்காப்பியம். இதற்குப் பல நூற்றாண்டுகட்குப் பின்னரே அதாவது இறையனார் அகப்பொருள் உரையால் யாப்பும் உடன் சேர்க்கப்பட்டு தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு என நால் வகையாய் நடந்தது என அறியலாம். (பிற்காலத்திலேயே), வீரசோழிய காலத்தே தான் அணியிலக்கணம் பிரிந்து ஐந்திலக்கணம் என்ற வழக்கு உண்டாயிற்று எனலாம். தொல்காப்பியர் ஒரு தனி இயலில் உவமையைப் பற்றி விரிவாகக் கூறுகின்றார். ஆனால் ' அணி ' என்ற பெயராலோ, பிற்காலத்தார் கூறிய பலப்பல அணிகளையோ அவர் குறிப்பிடவில்லை. தொல்காப்பியத்தை ஆய்ந்த உரையாசிரியர்களும், பிறரும் உவமையினைத் தொல்காப்பியர் விரிவாகக் கூறினாலும் பொருளை விளக்க உவமையை ஒரு கருவியாகக் கொண்டாரே தவிர அதைப் பிற்காலத்தார் கொண்டது போல ' அணி ' என்ற சொல்லாலோ, கருத்தாலோ எங்கும் குறிப்பிடவில்லை. எனவே தொல்காப்பியர்க்கு அணி ' உடன் பாடன்று ' என்பர்.

உவமையே அணிகட்கெல்லாம்தாய் என்பதும் அவ்வுவமையிலிருந்தே எல்லா அணிகளும் பிறக்கின்றன என்பதும் யாவர்க்கும் உடன்பட்ட கருத்தாகும். வடநூலார்க்கும் இது உடன்பட்ட கருத்தாகும். இதனையே " உவமையென்னும் தவலருங் கூத்தி, பல்வகைக் கோலம் பாங்குறப்புனைந்து, காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி, யாப்பறி புலவரிதய, நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே " என வடநூல் உணர்ந்த அப்பைய தீட்சிதர் சித்திரமீமாஞ்சையில் கூறுகிறார்,

செய்யுளில் அமையும் அழகுக்கு அணியென்ற பெயரே பொருத்தமற்றது என்பர் தொல்காப்பிய உரையாசிரியர் பலரும். அவருள் பேராசிரியர் இப்பெயரை (அணி) வன்மையாகவும் விரிவாகவும் மறுக்கின்றார். அணியிலக்கணம் அளவொடு படாத வரம்பு கடந்த நிலையினையுடையதாயிருத்தலே அதற்குக் காரணமாகும் பிற்காலத்தே தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம் முதலிய அணி நூல்களும் பொருளணி வகைகளை முறையே 35 ஆகவும், 64 ஆகவும், 100 ஆகவும் முறை கடந்துதத்தமக்குத் தோன்றியவாறு கூறுகின்றன. இவ்வாறு அணியிலக்கணத்தையும் உள்ளடக்கி பிற்காலத்தே ஐந்திலக்கணம் கூறிய நூல்கள் வீரசோழியமும் அதன் பின்னே தோன்றிய இலக்கண விளக்கம் தொன்னூல், முத்து வீரியம் என்பனவே யாகும்.

இத்தகைய உவமை அகம், புறம் ஆகிய இரு பொருளுக்கும் பொதுவாய் அமைந்ததே யாகும் அகம், புறம் ஆகிய இவ்விரு திணைப் பொருள்களும் உவமம் பற்றி வழக்கினுள் அறியப் படுதலான் அகத்திணையியலுள் உவமத்தினை உள்ளுறை உவமம், ஏனையுவமம் என இரண்டு பகுப் பாக்கிக் கூறினர் பொருள் புலப் பாடு கூறும் மெய்ப்பாடும், உவமமும் அடுத்தடுத்துக் கூறப் படுவதன் காரணம் இவ்வுவமமும் பொருள் புலப்பாடே கூறுவதாகலின் என அறியலாம். " ஆபோலும் ஆமா " என்று எடுத்துக் காட்டுக் கூறும் போது ஆமா கண்டறியாதான் காட்டுள் சென்ற வழி அதனைக் கண்டால் ஆபோலும் என்னும் உவமையால் ஆமா இது வென்று உணர்வான். ஆகலின் உவமம் பொருள் புலப்பாட்டிற்கு இன்றியமையாதவாயில் என அறியலாம்.

உவமைத் தோற்றம்:

இவ்வுவமை வினை, பயன், மெய், உரு எனும் நான்கன் கூறு பாட்டினை எய்தி வினையுவமம், பயனுவமம், மெய்யுவமம், உருவுவமம் எனப் பெயரெய்தும்.

(உ-ம்) 1. புலியன்ன மறவன் — வினை உவமம்
2. மாரியன்ன வண்கை — பயனுவமம்
3. துடியிடை — மெய்யுவமம்
4. பொன்மேனி — உருவுவமம்

மேற்கூறிய நான்கு உவமங்களும் ஒருபொருளோடு ஒருபொருள் உவமம் செய்யும் வழி ஒன்றே யன்றி இரண்டும், மூன்றும் விரவி வருதலே மரபாகப் பெறும்.

எடுத்துக்காட்டாக "செவ்வானன்ன மேனி" என்ற வழி வண்ணம் ஒன்றுமே பற்றி உவமம் சென்றது. "அவ்வான், இலங்கு பிறையன்ன விளங்குவால் வையெயிற்று" என்ற விடத்து வண்ணமும், வடிவும் பற்றி உவமம் சென்றது

மேலும் உவமை யெனப்பட்டது உயர்ந்த பொருளாகல் வேண்டும் எனவே உவமிக்கப்படும் பொருள் இழிந்த தாய் அமைதல் வேண்டும்

"அரிமா அன்ன வணங்குடைத் துப்பின்" எனவும்
"கடல் கண்டன்ன கண்ணகன் பரப்பின்" எனவும்
"பொன் மேனி" எனவும் வரும்.

உவமையின் நிலைக்களன்:

இவ்வுவமைகள் சிறப்பு, நலன், காதல், வலி என்னும் நான்கினையும் இடனாகக்கொண்டு பிறக்கும். எடுத்துக்காட்டாக

1 "முரசு முழங்கு தானை மூவருங்கூடி
அரசவை யிருந்த தோற்றம் போல"
என்பதில் சிறப்பு நிலைக்களனும்

2. "ஓவத்தன்ன இடனுடைய வரைப்பின்"
என்று நலன் அடிப்படையாயும்

3. "பாவையன்ன பலராய் மாண் கவின்" என
காதல் நிலைக்களனும்

4. "அரிமாவன்ன வணங்குடைத் துப்பின்"
என வலி காரணமாயும் உவமை பிறந்தது.

மேற்கூறிய நிலைக்களம் நான்கேயன்றி கீழ்ப்படுக்கப்படும் பொருளோடு ஐந்தாகவும் உவமை நிலைக்களன் அமையும்.

"அரவு நுங்கு மதியின் நுதலொளி கரப்ப" என்பதில் கீழ்ப்படுக்கப்படும் பொருள் அமைந்தது. மேற்கூறிய உவமை முதற்பொருளோடு முதலும், சினையொடு சினையும், சினையொடு முதலும், முதலொடு சினையுமாக மாறி உவமிக்கப்படுதலு முண்டு.

சுட்டிக்கூறும் உவமம் :

இனி " பவளம் போற் செந்துவர்வாய் " என்றவிடத்து சுட்டிக் கூறிய உவமமாகும் காரணம் பவளம் வாய் ஆகிய இரண்டிற்கும் பொதுவாகிய செம்மைக் குணத்தினை உவமம் செய்துள்ளமையே யாகும். இது " பவள வாய் " என்ற வழி சுட்டிக் கூரு உவமமாம். பவளத்தினையும் வாயினையும் கூட்டிப் பார்த்து செம்மைக் குணம் பற்றி உவமம் செய்ததென்று அறியப் படும். மேலும் உவமையும், பொருளும் தம்மில் ஒத்தனவென்று உலகத்தார் மகிழ்ச்சி செய்தல் வேண்டும். காட்டாக " மயில் தோகை போலும் கூந்தல் " என்ற வழியும் ஒத்ததாய் அமைந்தது " காக்கைச் சிறகன்ன கருமயிர் " எனக் கூறின் ஒத்ததாய் கருதப்படாது. " புலி போலப் பாய்ந்தான் " என்ற வழி அமைந்த சிறப்பு " பூசை போலப் பாய்ந்தான் " எனின் அமைய வில்லை

இனி பொருளை உவமமாக்கி உவமையைப் பொருளாக்கி மயங்கக் கூறும் போதும் உவமம் போல உயர்ந்ததாக்கியே கூறப்படும்.

" வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை "

என்றவிடத்து வருமுலையும். திருமுகமும் ஈண்டு உவமையாகி முகையும். பூவும் பொருளாயின. ஈண்டு முலையும், முகமும் உயர்ந்தனவாகச் செய்தமையின் உவமமாயின. முலைக்கோங்கம், முகத்தாமரை என்பனவற்றைப் பேராசிரியர் உவமைத் தொகை யாகக் கொள்ளுகின்றார். இதனைப் பிறர் உருவகம் என மயங்கிக் கூறுவர் எனவும் மறுத்துரைக்கிறார். இன்னும் இறப்ப உயர்வும், இறப்ப இழிவும் உவமிக்குங்கால் இன்னவாகச் செய்யாது சிறப்பின் நீங்காதவாகிக் கேட்டார் உளங்கொள்ளு மாற்றான் வருதலை மரபாகக் கொள்ளும். சான்றாக " அவாப்போல் அகன்ற அல்குல்மேல் சான்றோர், உசாஅப் போலுண்டே நுசுப்பு " என்றவிடத்து உலகோர் அவாப் போலும் அகன்ற அல்குல் எனக்கழி பெரும் பரப்பிற்றாகக் கூறினும் அது சிறப்பிற்றிரா, குறிப்பிற்றாதல் கீழக்குண்டாகலின் உடம்படப் படும்.

மேலும் அன்ன, ஏய்ப்ப முதலாகக்கூறும் முப்பத்தாறு சொல்லும் பிறவும் வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் உவமை உருபுகளாக வரப்பெறும் இவ்வுருபு மறைந்து வருவது

உவமைத் தொகை யெனவும், விரிந்து வருவது உவமை விரி எனவும் கொள்ளப்படும்.

மெய்ப்பாட்டில் உவமை:

பெருமை சிறுமை ஆகியவைபற்றி ஒப்புமை கொள்ளப்படும் உவமை. நகை, அழுகை, இளிவர, மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எட்டு மெய்ப்பாட்டின் வழிப் பிறக்கும்.

"களவுடம் படுநரில் கவிழ்ந்து நிலங்கிளையா" என்பது நகை உவமமாயும், "கலங்கவிழ்ந்த நாய்கன்போல்" என்பது அவல அடிப்படையிலும் "பெருஞ்செல்வரில்லத்து நல்கூர்ந்தார் போல்" என இளிவரல் அடிப்படையிலும், "நீருட் குவளை வெந்தற்று" என்பது மருட்கை உவமமாயும்

"சாந்தகத்துண்டென்று செப்புத் திறந் தொருவன்
பாம்பு அகத்துக் கண்ட துடைத்து"

என அச்சவுவமம் எனவும்

"மலரைை மறஞ்சாய்த்த மால்போல்தன் கிளைநாப்பண்
கல்லுயர் நனஞ்சாரல் கலந்தியலு நாடகேள்"

எனப் பெருமித வுவமமாகவும், "கூற்று வெகுண்டன்ன முன்பொடு, மாற்றிடுவேந்தர் மண்ணுேக்கினையே" என்பது வெகுளிவுவமையாகவும் தோன்றின இவற்றுல் எட்டு மெய்ப்பாட்டினை நிலைக்களனுகக் கொண்டு உவமை பிறக்கும் என அறியலாம். இனி உவமையுள் அடையும், அடையடுத்த பொருளும் என இரண்டாகச் சொல்லப்படும் கிளவி இரண்டாக்கி அம்முறையிலேயே நிறுத்தப்படும் காட்டாக

"பொன்காண் கட்டளை கடுப்பச் சண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்"

எனவரும் பைம்பூண்புடைத்த செஞ்சுவட்டினையும், மார்பினையும் பொன்னுரையோடும், கல்லோடும் உவமித்தலின் இரட்டைக் கிளவி இரட்டை வழித்தாயிற்று.

உள்ளுறை உவமை

இதுவரை ஏனை உவமங்களை விளக்கினேம். இனி உள்ளுறை உவமம் பற்றிக் கூறுவோம். உவமையோடு உவமிக்கப்படும்

பொருள் பிறிதொன்று தாராது உவமை பிறந்த நிலங்களுட் சார்த்தி நோக்கி முன்னை மரபினோடு கூறும்போது இன்ன பொருட்கு இஃது உவமமாயிற்று, என்று உணர்வுடையோரைப் பெற்றால் ஏற்றவாறு துணிந்து கொள்ளத் தோன்றும் என்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறுகின்றார். இக் கூற்றால் உள்ளுறை உவமம் எல்லோர்க்கும் புலனாகாது நல்லுணர்வுடையோர்க்கே புலனாகும் என்பதும், செய்யுளுட் பயின்று வரும் என்பதும் புலனாகின்றது. இத்தகைய உவமைப் போலி எனப் பேராசிரியரால் அழைக்கப்படும் உள்ளுறை உமமம் வினை. பயன்; மெய், உரு, பிறப்பு என்னும் ஐவகை நிலத்தும் பிறக்கும் எனக் கூறுகின்றார். "தவலருஞ் சிறப்பினத்தன்மை நாடின்" என்றதனால் ஏனையுவமத்தினும், உள்ளுறை உவமமே செய்யுட்கும், பொருளிலக்கணத்திற்கும் சிறந்ததென்பது அறியலாம்.

வினை உள்ளுறை உவமத்திற்கு

"கரும்புநடு பாத்திக் கலித்த தாமரை
சுரும்பு பசி களையும் பெரும்புனலூர
புதல்வ னீன்ற வெம் முயங்க
லதுவே தெய்யநின் மார்பு சிதைப்பதுவே"
(ஐங்குறு - 66)

"தாமரையினை விளைப்பதற்கே யன்றி கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியுள் தானே விளைந்த தாமரை சுரும்பின் பசி தீர்க்கும் என்ற தலைவியின் கூற்றில் காதற்பரத்தை யர்க்கும் இற்பரத்தையர்க்கும் அமைக்கப்பட்ட இல்லில் யாமும் இருந்து இல்லறம் பூண்டு விருந்தோம்புகின்றனம் என்ற குறிப்பு வெளிப்படுகிறது. இவ்வுவமை ஆண்டுப் பிறந்தன வற்றோடு நோக்கிக் கருத்தினாற் கொள்ள வைத்தலின் உள்ளுறை உவமமாயும், 'சுரும்பு பசிகளையும்" தொழிலோடு விருந்தோம்பும் தொழில் உவமம் கொள்ள நின்றமையின் வினை உள்ளுறை உவமமாயிற்று.

"குன்றத்து பொருகளிறு மிதித்த நெரி தாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தல் பெய்மார்
நின்று கொய மலரும் நாடன்"

என்றதனால் "மிதியுண்டு வீழ்ந்த வேங்கை குறையுயிரோடு மலர்ந்தாற் போல் யானும் உள்ளேன்" எனக் கூறியதனால் மெய்யுள்ளுறை உவமமாயிற்று.

"வண்ண வொண்டழை நுடங்க வாலிழை
யொண்ணுத லரிவை பண்ணை பாய்ந்தெனக்
கண்ணறுங் குவளை நாறி
தண்ணென் றிசினே பெருந் துறைப்புனலே"

என உரு உவமைப் போலிக்கு ஏற்ற காட்டுத் தருகின்றார். "நீ புனலாடிய ஞான்று பரத்தை பாய்ந்தாடிய புனலெல்லாம் தண்ணென்றது எனக் கூறிய வழி அத்தடம் போல் இவள் உறக் கலங்கித் தெளிந்து தண்ணென்றாள். என்பது உணரப் பட்டது. இனி

"பொய்கைப் பள்ளி புலவு நாறு நீர் நாய்
வாளை நாளிரை பெறூஉ மூர
எந்நலந் தொலைவ தாயினும்
துன்னலம் பெரும பிறர் தோய்ந்த மார்பே"

என்னும் இப்பாடலுள் நற்குலத்திற் பிறந்தும் இழிந்தாரைத் தோய்ந்தமையின் அவர் நாற்றமே நாறியது எனப் பிறப்பு வமைப் போலிக்கு எடுத்துக் காட்டு கூறுகின்றார். இனி

"நீருறை கோழி நீலச் சேவல்
கூருகிர்ப் பேடை வயாஅ மூர
புளிங்காய் வேட்கைத் தன்று நின்
மலர்ந்த மார்பிவள் வயாஅ நோய்க்கே"

என்ற பாடலில் "நீருறை கோழி நீலச் சேவலை அதன் கூருகிர்ப் பேடை நினைந்து கடுஞ்சூலால் வந்த வயா நோய் தீர்த்தற் பயத்தவாகும். அதுபோல நின்மார்பு நினைந்து தன் வயா நோய் தீரும் இவளும்" எனப்பயன் உள்ளுறை உவமம் கூறினர்.

மேற்கூறப்பட்ட ஐந்து வகை உள்ளுறை உவமங்களும் திரிதொடுபடாது பிறப்பு நோக்கி உணரக் கூறியவழி அக்கூற்று தலை மகட்கும், தோழிக்கும் உரித்தாகுங்கால் தலைவிக்காயின் அவளறிந்த கருப்பொருளாயின கொண்டு செய்யல் வேண்டும். தோழிக்காயின் அந்நிலத்துள்ளன வெல்லாம் சொல்லப்பெறும்

என விதி செய்கின்றார். இதனாலறிவதியா தெனில் தலைமகள் இந்நிலத்துள்ளன வெல்லாம் அறியுந்துணை பயிற்சியிலள் எனவும் தோழியாயின் நிலத்துள்ளன அறியச் சிதைந்ததின் றெனவும் கூறி அவர்கள் நிலைபுலப்படுத்தினர். "பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை" மரம் படப்பையிலுள்ளது ஆதலின் தன்னாற்பூக் கொய்யப் படுமாகலானும் இது தலைவி அறிகிளவி யாயிற்று. "தன்பார்ப்புத் தின்னும் அன்பின் முதலை" என்பது தோழியற் கிளவியாயிற்று.

இவ்வாறு உள்ளுறை உவமை கூறுங்கால் கிழவோன் கூறும் போது தன் உரன் தோன்றச் சொல்லப்படும், தாம் அறிந்த கிளவியானும், நிலம் பெயர்ந்துரையாத பொருளானும் உள்ளுறை உவமம் கூறப்பெறும்.

"கருங் கோட் டெருமைச் செங்கட் புனிற்று
காதற் குழவிக்கு ஊறுமுலை மடுக்கும்
நுந்தை நும்மூர் வருதும்
ஒண்டொடி மடந்தை நின்னையாம்பெறினே"

(ஐங்குறு - 92)

என்றவிடத்து "தாய் போன்று நும்மைத் தலையளிப்பலெனத் தலைமகன் தலைமை தோன்ற உரனொடு கிளந்தவாறு அறியலாம்.

மேலும் உள்ளுறை உவமம் இன்ப, துன்பங்கள் தோன்றச் சொல்லப்படும் "கழனி மாஅத்து விளைந்துகுதீம்பழம். பழன வாளைக் கதூஉ மூரன்" என்று பல வகை இன்பமும் வருந்தாது பெறுவர் என்பதற்கு உவமையாய் வருதலின் "இனிதுறு கிளவியாம்." "தாய் சாஅப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு, பிள்ளை தின்னு முதலைத்து" எனத்தலைமன் கொடுமை கூறினமை யின் "துனியுறு கிளவி" யாயிற்று. இத்தகு உள்ளுறை உவமத்தினைத் தலைமகள் இரண்டிடத்தல்லது சொல்லப் பெறுள் என உறுதியாகக் கூறி இதுவும் மருதம், நெய்தல் ஆகிய இரு நிலத்தும் பிறந்த பொருள் பற்றியல்லது உள்ளுறை உவமம் கூறுதல் கிழவிக் குரியதன்று என உணரப்படும். "தாமரை வண்டூது பனி மலராரு மூர" என்ற விடத்து வண்டூது பனி மலர் எனப் பிறர்க் குரிய மகளிரெனவும், அவரை நயப்பாய் எனவும், உள்ளுறை உவமம் மருதத்தினைக்கண் வந்தது அறியலாம்.

" அன்னை வாழி வேண்டன்னை கழிய
முண்டக மலரும் தண் கடற் சேர்ப்பன்
என் தோள் துறந்தன னாயின்
என்னுங் கொல்லவ னயந்தோள் தோளே "

(ஐங்குறு - 108)

என்பது நெய்தல் நிலத்திற்குரியதாகும் இதனால் கழியில் முண்டக மலரும் என முள்ளுடையதனைப் பூமலருமென்று உள்ளுறுத்ததனுன் இருவர் காமத்துறைக் கண்ணும் ஒரு தலை இன்னா ஒரு தலை இனிது என்றான் என்பது " என்தோள் துறந்தனன் " என்பது முள்ளுடைமையோடொக்க ' என்னுங் கொல்லவ னயந்தோள் தோள் ' என்றவிடத்து அவள் அன்பிற் றிரியாமை கூறினமையின் முண்டகமலர்ச்சியோடு ஒப்பிக்கப் படும்

இவ்வாறு சிறப்புமிக்க உள்ளுறை உவமம் அவ்வாறு வேறுபட வந்தன வாயினும் மேற்கூறிய பகுதியானே கொள்ளு மிடமறிந்து கொள்ளுக எனக் கூறுகின்றார். இவ்வாறு கூறிய தனால் பிற அணியிலக்கண ஆசிரியர் தனித்தனி அணியாகக் கொண்டனவற்றை யெல்லாம் இதில் கொள்ள வைக்கின்றார், தண்டியாசிரியர் கூறும் விரியுவமை, உண்மை, மறுபொருள். வீரசோழியம் கூறும் தடை யுவமை, உம்மை யுவமை முதலிய வற்றையும் மேலும் தண்டியாசிரியர் கூறும் இசை யுவமை, கருத்துவமை, மோகவுவமை, விலக்குவமை, வேற்றுப் பொருள் வைப்பு முதலிய அணிகளையும் இவ்வுவமை இயலுள் " வேறுபட வந்த உவமத் தோற்றம் " என்ற அடியுள் அடக்கிப் பேராசிரியர் கொள்ள வைக்கிறார்.

இவ்வாறு ஒத்தனவற்றைக் கூறுதல் தான் " உவமம் " எனக் கருதற்க ஒவ்வாதெனக் கூறுதலும் உவமையாதற்கு ஏற்ற வழக்கு எனக் கூறுகின்றார். இதற்கு எடுத்துக் காட்டாக " யாங்ஙன மொத்தியோ. வீங்கு செலல் மண்டிலம் " என்றும் " மாதர் முகம் போல் ஒளிவிட வல்லையேல் காதலை வாழி மதி " எனவும் வரும். இவைகளுள் " யாங்ஙன மொத்தியோ " என்பது ஒவ்வாயென்னும் குறிப்பிற்று. ' காதலை வாழி மதி " என்றவழி யான் காதலியாமையால் மதியமே அவள் வாள்முகம் ஒவ்வா யென்றலின் ஒரீஇக் கூறிற்று. இதனைத் தொல்காப்பியர்

"ஓரீஇக் கூறலும் மரீஇய பண்பே" என்ற நூற்பாவால் துணிவுறுத்துகின்றார்.

மேலும் பெருமை, சிறுமை ஒரு பொருட்குக் கூறுது பட்டாங்கு உவமம் கூறுதலும், ஏற்புடைத்தாகும். அதனுலும் ஓருபயன் தோன்றச் சொல்லும் நெறியான் என்பது. எடுத்துக் காட்டாக

"பாரிபாரி யென்று பலவேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்"

எனும் பாட்டில் உலகளித்தற்கு மாரியும், உண்டென மாரியை உவமித்துச் சிறப்பித்துக் கூறுவான் மாரியைச் சிறப்பித்துப் பாட்டுடைத் தலைவனுகிய பாரியை உயர்த்துக் கூருதான் போல இயல்பினுல் உவமை கூறினும். இதனுல் மாரிக்கும், பாரிக்கும் ஓரிழிவில்லை என்னும் தன்மைப்படக் கூறவே அவனுயர்வு கூறு தலின் பயனிலைபுரிந்த வழக்காயிற்று இவ்வாறு கூறுங்கால் உவமையைப் பொருளாக்கியும், பொருளை உவமமாக்கியும் தடுமாறச் சொல்லலும் உவமையும், பொருளும் வேறுநிறுத்தி இதுபோலும் இதுவென்னுது அவ்விரண்டினையும், உவமையுறச் சொல்லுதலும் ஆகிய தடுமாறுவமங்கள் உவமையுள் அடக்கிக் கொள்ளப்படும்.

மேலும் உவமையினையும், பொருளினையும் நிறுத்தி அடுக்கிய தோற்றம் சிறப்புடையதாகக் கொள்ளப்படாது. எடுத்துக் காட்டாக "மதியத்தன்ன வாண் முகம் போலும், பொதியவிழ் தாமரைப் புதுப் பூம் பொய்கை" என்று கூறும்போது மதியம் போன்ற வாள் முகத்தினைத் தாமரை யென்றமையின் அவை ஒன்றோ டொன்று பொருந்தா வென நீக்குகின்ருர். இதற்கு மேலாக உவமையும் பொருளும் நிரலே நிறுத்தி ஒப்புமைகளின் நிரனிறை யெனப்படும்.

"கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்தமுகம் வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞைநடை நோக்கு சாயல்
வடிவினளே வஞ்சி மகள்" எனவரும்

இதில் கொடி. குவளை. கொட்டையினை முறையே நிறுத்தி கொடி நுசுப்பு, குவளை உண்கண், கொட்டைமேனி எனவும், மதிமுகம், பவளவாய். முத்தமுறுவல், பிடிநடை, பிணைநோக்கு. மஞ்ஞைச் சாயல் எனவும் உவமையும், பொருளும் நிரலே நிறுத்தி உவமங் கொண்டார், இவ்வாறு அன்றி மாறி வருவனவற்றையும் அமைத்துக் கொள்ளலாம் என்கின்றார்.

முடிவுரை

இனி இவ்வியலுள் கூறும் உவமைகளில் சிலவற்றையும் சொல்லதிகாரத்தினுள்ளும் செய்யுளியலுள்ளும் சொல்லுகின்ற சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு மற்றவை செய்யுட் கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் தண்டிபோன் றோர் அணியிலக்கண நூல் செய்தனர் அவை ஒருதலையாக செய்யுட்கு அணியெனக் கொள்ளப்படாது இவைகளை 'பொருளுறுப்பு" என்றே கொள்ளலாம். பொருளதிகாரத் துள் பொருட்பகுதிகள் எல்லாம் செய்யுட்கு அணியாகலான் அவை பாடலுட் பயின்றவையெனப்பட்டன ஆகலின் அவை யெல்லாம் தொகுத்து அணியெனக் கூறாது வேறு சிலவற்றை வரைந்து அணியெனக் கூறுதல் பயனில் கூற்றாக முடியும். மேலும் "பொருளுறுப்பாகக் கொண்டால் சாத்தனையும் சாத் தனால் அணியப்பட்ட முடியும் தொடியும் முதலாயினவற்றையும் வேறு கண்டாற் போல அவ்வணியும் செய்யுளின் வேறாகல் வேண்டுமாம் செய்யுட்கணி செய்யும் பொருட் படையெல்லாம் கூறாது சிலவே கூறி மொழியின் குன்றக் கூறலாகவும் கருதப்படும்

ஆகவே செய்யுளும். அணியும் செறிந்தினிது நடப்பதே சிறப்புடைத்தாகும் என்பது பேராசிரியர் கருத்தாகும் இதனால் உவமத்தின் சிறப்புடைமை உணர்தற் கெளிதாகும். அதுவே அணிகட்கெல்லாம் முதல்வனாகும் என ஓர்ந்துணரலாம்.

அகல் விளக்கு

இராம. சுப்பிரமணியன், M. A. B L., B Lib Sc.
4-B, தீத்தாரப்ப முதலி தெரு. திருவல்லிக்கேணி,
சென்னை — 600005.

டாக்டர் மு. வ. அவர்களின் படைப்புக்களுள் அகல் விளக்கிற்குத் தனிச் சிறப்பு ஒன்று உண்டு ஆசிரியருக்குச் சாகித்திய அகாதெமியின் 1961-ஆம் ஆண்டுக்குரிய பரிசை வாங்கித் தந்த நாவல் அது அகல் விளக்கை ஒரு முறை படிக்கும் எவரும் அதனிடம் தம் நெஞ்சைப் பறிகொடுத்து விடுவர்; அந்த ஆற்றல் அகல் விளக்கிற்கு உண்டு. மு வ. வைப் படிக்க விரும்புவோர் முதலில் படிக்க வேண்டிய நாவலும் அதுவே ஆகும்.

அகல் விளக்கின் நோக்கிலும், போக்கிலும் ஒரு புதுமையைக் கையாண்டுள்ளார் ஆசிரியர். வேலய்யன் என்ற இளைஞர் ஒருவர்தம் இளமை நினைவுகளைத் திரும்ப நினைத்துக் கொள்கிறார். அந்த இளைஞரின் நினைவோட்டமே ‘ அகல் விளக்கு ’ ஆகும்.

சந்திரனும் வேலய்யனும் இளமை நண்பர்கள். இளமையில் இருவரும் ஒரே வகுப்பில் பயின்று, ஒன்றாகவே விளையாடி. ஒன்றாகவே வளர்ந்தவர்கள். ஆனால், பத்தாவது வகுப்புக்குப் பின்னர் அவர்கள் வாழ்வில் பிரிவு ஏற்பட்டது. பிரிவு விரிந்து பரந்து ஒருவரை ஒருவர் எட்டாத அளவிற்குக் கொண்டு சேர்த்துவிட்டது.

சந்திரனுடைய வாழ்வு மேடு பள்ளம் நிறைந்தது. வேலய்யனுடைய வாழ்வு சமவெளியில் அமைதியாகச் செல்லும் பெரிய ஆற்றை ஒத்தது

சந்திரனுடைய வாழ்க்கை அரளிச் செடியைப் போன்றது. வேலய்யனுடைய வாழ்க்கை துளசிச் செடியைப் போன்றது

சந்திரனைப்போல் நல்ல அழகும், கூரிய அறிவும் பெற்று அதனால் செருக்கடைந்து சீரழிந்து தாமும் கெடடுப் பிறர்க்கும் சுமையாக வாழ்வதைவிட வேலய்யனைப் போல் அறிவு குறைவாக இருந்தாலும் சிறந்த பண்புகளைப் பெற்று அடக்கமான வாழ்வு வாழ்ந்தாலே போதும் என்ற உயர்ந்த வாழ்க்கைக் குறிக்கோள் இக் கதையைப் படிக்கிறவர்கள் உள்ளத்தில் உருவாகும்.

" ஒரு குடும்பத்தின் தலைவியாக, பல மக்களுக்குத் தாயாக விளங்கவேண்டிய கட்டான உடம்பும், ஈரமான நெஞ்சும் படைத்த ஊழ் அந்த அம்மையார்க்குத் தனிமைத் துன்பத்தையே வாழ்வின் பரிசாக அளித்துவிட்டது "

என்ற வரிகளைப் படிக்கும்போது துக்கம் நம் நெஞ்சை அடைக்கிறது; வாய்விட்டுக் கதறி அழவேண்டும் என்ற உணர்வு மேலிடுகிறது.

அத்தகைய துக்கத்தைப் பெற்ற பாக்கிய அம்மையார் தம் துன்பங்களை எல்லாம் மறந்து ஆற்றியிருந்து திருக்குறளையும், திரு வி க. போன்ற பெரியார்களின் நூல்களையும் படித்துப் பயன்பெற்று ஒளி விளக்காய்த் திகழ்கின்றார். அந்த விளக்கின் ஒளிபட்ட கற்பகமும் கயற்கண்ணியும் மணிமேகலையும் நற்பண்புகள் பலபெற்று வாழ்க்கைச் சிக்கலில் உழலாமல் உயர்கின்றார்கள்.

அறவொளியை அளிக்கும் கல்வியைப் பயின்றும், மூட நம்பிக்கைகள் பலவற்றை வளர்த்துக்கொண்ட மாலன் குறுக்கெழுத்துப் போட்டியிலும், குதிரைப் பந்தயங்களிலும் பணத்தை இழந்து மனம் ஏங்குகின்றான் உழைப்பு இல்லாமலும் எளிதாகவும் செல்வத்தைச் சேர்க்க மனம் எண்ணுகிறது. செம்பைப் பொன்னாக்கும் ரசவாத வித்தை காட்டும் சாமியார்களின் பின் சென்று அலைகிறான். அவன் வாழ்வில் இரக்கம் கொண்ட வேலய்யன், எனக்கு உழைப்பில் நம்பிக்கை உண்டு, அறத்தில் நம்பிக்கை உண்டு " என்று கூறி மாலனுடைய தவறான நம்பிக்கைகளைப் போக்கும் முயற்சி பாராட்டத் தக்க வகையில் அமைந்துள்ளது.

" என்ன உலகம் இது? பெண்கள் இருவர் பழகினால் உடம்பைக் கடந்து உள்ளத்தின் உறவு கொண்டு பழகவில்லையா? ஆண்கள் இருவர் பழகும்போதும் அப்படி உள்ளத்தால் பழகவில்லையா? ஓர் ஆணும் ஒரு பெண்ணும் பழகும்போது மட்டும் உள்ளம் இல்லையா? ஏன் இந்தத் தடுமாற்றம் எல்லாம்? " .. இமாவதியின் ஆழ்ந்த உள்ளத்திலிருந்து எழுந்த இந்தக் கேள்வியை ஒவ்வொரு ஆணும், பெண்ணும் எண்ணி. எண்ணி, விடை காண முடியுமானால், சமுதாயம் பண்பாடு மிக்கதாய் எளிதில் முன்னேற்றம் எய்தலாம்.

சீரழிந்த சந்திரன் தொழுநோயின் பிணிப்பிலே உழன்று வருந்திக் கடைசியாக உணர்வுபெற்று உண்மைகளை யெல்லாம் வெளியிட்டு ஆத்திரத்துடன் பேசும் பேச்சுக்கள் உள்ளத்தை உருக்குகின்றன.

" நீ மண் அகலாக இருந்த காலத்தில் நான் பித்தளை அகலாக இருந்தேன். சிறிது காலம் பளபள என்று மின்னினேன். என் அழகையும் அறிவையும் அப்போது எல்லாரும் விரும்பினர்கள். பாராட்டினர்கள். என்ன பயன்? வரவர எண்ணெயும் கெட்டது, திரியும் கெட்டது, சிட்டமும் பிடித்தது. ஒளி மங்கியது. மங்கிவிட்டேன். நீ தான் நேராகச் சுடர்விட்டு, அமைதியாக எரியும் ஒளி விளக்கு " என்று வேலய்யனிடம் சந்திரன் கூறும் கருத்துக்கள் கதையின் கருப் பொருளாக அமைகின்றன.

" விளையாட்டாக இருந்தாலும், விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டும். தெரியுமா? நீயே அரசன் என்று எண்ணிக் கொண்டு, உன் விருப்பம் போல் ஆட முடியாது. தெரிந்து கொள் " என்று பந்தாட்டக்காரன் சொல்லும் சொற்கள் நமக்கு அறன்வலி யுறுத்தலாக எண்ணிக் கொள்ள வேண்டும்.

மனிதரில் மூன்று வகையினர் உண்டு: 1 செடி முழுவதும் மணம் கமழும் துளசி போல் விரும்பத்தக்கவர்கள். 2. பூ மட்டும் மணம் கமழும் அரளி, தாழை போன்றவர்கள், 3. மணம் இல்லாத மலர்களைத் தாங்கும் குரோட்டன, மெகர்த்தா, ஜிரேனியம் போன்றவர்கள்.

உலகத்தில் மூன்றுவது பிரிவினர் பலர் இருக்கிருர்கள். அவர்கள் குரோட்டன், மெகர்த்தா. ஜிரேனியம் போன்ற செடிகளின் பூக்களைப் போல் அழகான தோற்றத்தோடு, வகை வகையான உடையலங்காரங்களோடு இருக்கிருர்கள் அவர்களைத் தொலைவில் இருந்து கண்ணுல் பார்த்துத்தான் மகிழ வேண்டும். நெருங்கிப் பழகினுல் பொறுக்க முடியாது. உடனே வெறுப்புக் கொள்வோம்.

சந்திரனுடைய வாழ்க்கை தாழை போன்றது. தாழை மரத்தின் பூக்கள் மணம் நிறைந்த பூக்கள். அதன் இலைகள் முள் நிறைந்தவை தாழையின் பூக்கள் போல் அழகும் அறிவும் சுறுசுறுப்பும் இளமையில் சந்திரனிடம் காணப்பட்டது ஆனல் போகப் போக அவனுடைய வாழ்க்கைப் போக்கு மாறிவிடு

கின்றது. பயனற்ற - நாகரிகமும் அற்ற - மதிப்புக்கு உரியதல்லாத வாழ்க்கையாய் அவனுடைய வாழ்க்கை மாறிவிடுகின்றது. சந்திரனுடைய அறிவும் அழகும் தவிர, அவனுடைய வாழ்க்கையில் நல்லவை வேறு இல்லை. இவ்வாறு சந்திரனுடைய வாழ்க்கையில் நல்லவை வேறு இல்லை. இவ்வாறு சந்திரனுடைய வாழ்க்கை ஒருபுறம் கண்ணைக் கவரும் அழகும் நறுமணமும் உடைய மலர்களைக் கொண்டும், மற்றொரு புறம் அவற்றுக்கு மாறான இயல்புள்ள இலைகளைக் கொண்டுள்ள தாழையைப் போன்றது ஆகும்.

வேலய்யனின் வாழ்க்கை துளசிச் செடி போன்றது துளசிச் செடியில் அழகிய மலர்கள் இல்லை; வெறுக்கத் தக்க பகுதியும் இல்லை; மலரும், இலையும், தண்டும், வேரும் எல்லாம் ஒத்து ஒரே வகையான மணம் கமழ்வது அது அதுபோல் வேலய்யனுடைய வாழ்க்கை சந்திரன் வாழ்க்கையை விட மட்டமான வாழ்க்கையாக இருந்தாலும் - அழகிலும் அறிவிலும் சுறுசுறுப்பிலும் குறைந்த வாழ்க்கையாக இருந்தாலும் அடக்கமாக அமைதியாக மாறுதல் அவ்வளவாக இல்லாமல் ஒரே போக்கில் போய்க் கொண்டிருக்கும் வாழ்க்கை; உள்ளும் புறமும் ஒரே வகையான மணம் கமழும் நல்ல வாழ்க்கை; தூய எளிய நல்ல வாழ்க்கை. சந்திரனுடைய வாழ்க்கை போல் தொடக்கத்தில் அழகும் அறிவும் சுறுசுறுப்பும் பெற்றிருந்து இறுதியில் மாறி அடியோடு கெட்டு அழிவதை விட அழகு அறிவு சுறுசுறுப்பு இவை குறைந்த வாழ்க்கையாக இருந்தாலும் வேலய்யனின் வாழ்க்கை போல ஒரு வாழ்க்கையாக அமைதியாகப் போய்க் கொண்டிருக்கும் வாழ்வு மேலானது அல்லவா? இந்த உணர்வே அகல் விளக்கைப் படிப்போர் உள்ளத்தில் உருவாகும்

சந்திரனின் வாழ்க்கை வீழ்ந்ததற்குக் காரணம் இரண்டு காம உணர்வின் வேகம் ஒன்று; அடுத்தது அவனிடமிருந்த உயர்வு மனப்பான்மை. சந்திரன் தொழுநோய் மருத்துவமனைக்குப் போயிருக்கும் செய்தியைக் கேட்டு, கண்ணீர் தாரை தாரையாக வழிய கம்பிய குரலில் பாக்கியம் அம்மையார் கூறும் கூற்றில் இந்த உண்மை புலப்படுவதை உணரலாம் :

“வெறி பிடித்துத் தப்புச் செய்வது உண்டு தான், ஒரு முறை இரண்டு முறை தப்புச் செய்தாலும் திருந்தக் கூடாதா? படித்த பிள்ளைக்கு நல்ல புத்தகம் கிடைக்கவில்லையா? காலமெல்லாம் இப்படியா நடத்தை கெட்டு

அழிய வேண்டும்? கடவுள் ஏன் இப்படிப் படைக்க வேண்டும். ''

கல்லூரியில் சேர்ந்ததும் சந்திரனின் மனப்போக்கு முற்றிலும் மாறிவிடுகின்றது. ஒரு முறை வேலய்யன் தேர்வில் தவறி, தான் மேல் வகுப்புக்குப் போனதும் ஒருவகை உயர்வு மனப்பான்மை சந்திரனுக்கு ஏற்பட்டு விடுகின்றது. அதனுல் கல்லூரி வாழ்க்கையில் வேலய்யனேடு பழகாமல் ஒதுங்கி ஒதுங்கி வாழ்கிருன்; நெருங்க வொட்டாமல் வாழ்கிருன். ஒத்த உரிமையோடு திறந்த மனத்தோடு அவன் யாரிடமும் பழகவில்லே. வேலய்யனிடமும் அப்படிப் பழகவில்லே. அதனுல் உலகமே அவனுக்கு இருண்ட குகையாக இருக்கின்றது, வழி தெரியாமல் தடுமாறித் தடுமாறிக் கெடுகிருன்

அறிவும் ஆற்றலும் இருந்தும் சந்திரன் நல்ல புத்தகங்களே நாடவில்லே; யாராவது ஒரு பெரியவரிடத்திலாவது, ஒரு சிறந்த புத்தகத்திலாவது நம்பிக்கை வைத்து மனத்தைக் கொடுக்கவில்லே. நல்ல புத்தகமும், நல்லவர்களின் பழக்கமும் கிடைக்காததால்தான் சந்திரன் காலமெல்லாம் நடத்தை கெட்டு அழிகிருன்; வெறி பிடித்துத் தவறு செய்து அழிகிருன்.

கதைத் தலேமைப் பாத்திரத்துடன் நெருங்கிய தொடர்பு உள்ளவர் கூறுவதுபோல் அமைந்தது அகல் விளக்கு. அகல் விளக்கு சந்திரனே டாக்டர் மு வ வின நேரடி முறைப் பாத்திரமாக அமைத்துள்ளார். நாடக முறையில் பாத்திரங்களே உயிர்க்களே தோன்றப் படைத்துள்ளார்.

அமைதி வாழ்க்கைக்கு இலக்காக கயற்கண்ணி - வேலய்யன் ஆகியவர்களேப் படைத்துள்ளார்.

குறைகளுக்கு இடையே குணத்தைக் கண்டு வாழவேண்டும் என வற்புறுத்திய மு. வ. குடும்ப வாழ்க்கையில் அளவுக்கு மீறிய எதிர்பார்த்தல் கூடாது என்றும், உள்ளதைக் கொண்டு மகிழும் மனம் வேண்டும் என்றும் வற்புறுத்துகின்ருர்

"உள்ளதைக் கொண்டு மகிழ வேண்டும் வியாபாரம். செல்வம் இவற்றில் மட்டும் அல்ல; மனேவியோடு வாழும் வாழ்க்கையிலும் இது வேண்டும். மனேவியிடம் அளவுக்குமேல் அன்பு பணிவு அடக்கம் ஒழுக்கம் அழகு ஆர்வம் எல்லாவற்றையும் எதிர்பார்த்தாலும் கடைசியில் ஏமாந்து வருந்த வேண்டி ஏற்படும். ''

அகல் விளக்கில் வரும் பாக்கியம் அம்மையார் இளமையிலேயே கணவனை இழந்தவர். குழந்தை பெற்றுத் தாயாக விளங்கா விட்டாலும் தாய்மையுள்ளம் நிறைந்த அம்மையார் அவர். தந்தை மாரடைப்பால் இறந்துபட, தம்பியும் புறக்கணித்துவிட, திக்கற்று நிற்கும் நிலையிலும் பாக்கியம் அம்மையார் தானே உழைத்துச் சாப்பாடு தேடிக் கொள்கிறார்; இருபத்திரண்டு பிள்ளைகளுக்கு ஆசிரியராக மாறித்தொண்டு செய்கிறார். 'இனி மேல் என் சொத்து அன்பும் அறிவும் தான்' என்று சொல்லும் அளவிற்கு பாக்கியம் அம்மையாருக்குத் தியாக உணர்வு பொங்கித் ததும்புகின்றது. உழைக்கும் பழக்கமும் தொண்டு மனமும் இருந்தால் எப்படியும் வாழமுடியும் என்பதை அந்த அம்மையாரின் வாழ்க்கை தெளிவாக்குகின்றது. அவர் வாழ்க்கையில் விளைந்த இடர்களும் உள்ளத்தின் உயர்ந்த பண்பாடும் கூடி அவருடைய அறிவை வளர்த்து உயர்த்தி விடுகின்றன.

அகல் விளக்கில் நாம் காணும் சந்திரனின் வாழ்க்கை நம் உள்ளத்தைத் தொடும் ஆற்றல் பெற்றதாகும். அழகும் அறிவும் சுறுசுறுப்பும் நிரம்பிய சந்திரன், பின்னால் மனம் போன போக்கில் வெறிபிடித்துத் தவறு செய்து, மேலும் மேலும் ஆட்டங் கள் ஆடித் தொழுநோய் உற்றுக் கெட்டு அழியும் போது நம்மால் சந்திரனை வெறுக்க முடியவில்லை. அவனது இளமை வாழ்க்கையை எண்ணி இரங்குகிறோம். அவனுடைய வாழ்க்கை முடிவிற்காகக் கண்ணீர் வடிக்கிறோம். கடைசியில் சந்திரன் இளமை நண்பன் வேலய்யனிடம் உள்ளம் திறந்து தன் குற்றங் களைச் சொல்லி ஆறுதல் பெறும் பகுதி ஆழ்ந்த உருக்கம் அமைந்த பகுதியாகும்.

தமிழ் நாவல் உலகில் தனித்த முத்திரையோடு நாம் சட்டென்று இனம் காணக்கூடிய நடை டாக்டர் மு.வ.வின் நடை. சின்னஞ்சிறு வாக்கியங்கள்; உள்ளத்தில் இருக்கும் சிந்தனைத் தெளிவை அப்படியே பிரதிபலிக்கும் தொடரமைப்புக் கள், சிக்கலான விஷயத்தையும் போகிற போக்கில் எளிமை யாகப் புரிய வைத்து விடும் பண்பு - இவையே மு. வ. நடையின் தனிச்சிறப்புக்கள்.

"ஓர் ஏழை சாலையோரத்தில் ஒரு கோணிப் பையின்மேல் நெல்லிக் காய்களைக் கூறுகட்டி விற்றுக் கொண்டிருந்தான் —

காலணாவுக்கு எட்டுக்காய்கள் என்று விற்றுக் கொண்டிருந்தாள். நெல்லிக்காய் வாங்கலாம் என்றேன். சரி என்று சந்திரனும் வந்தான். என் சட்டைப் பையிலிருந்து ஒரு காலணா எடுத்தேன். சந்திரனும் எடுத்து நீட்டினான். கூடைக்காரி என்னிடம் எட்டுக் காய்களை எடுத்துத் தந்தாள்; சந்திரனிடமும் அவ்வாறே கொடுத்தாள். பிறகு 'கொசுறு' என்றேன். என் கையில் ஒரு சின்னக்காயைக் கொடுத்தாள். சந்திரன் கேட்கவில்லை ..."

"கோவலனுடைய தவறு நன்றாகத் தெரிந்திருந்தும், எதிர்த்துப் பிரிந்து வாழ்வதைவிட, அந்தத் தவறான வாழ்வுக்கு துணையாக இருந்து சாவதே நல்லது என்ற துணிவு கண்ணகியிடம் இருந்தது. அதனால் தான், பொருள் இழந்து வருந்திய கணவனுக்குத் தன் கால் சிலம்பைக் கொடுக்க முன்வந்தாள். கணவனைத் திருத்த முடியும் என்ற நம்பிக்கை இல்லாதபோதும் அந்த வாழ்வுக்குத் துணையாக இருந்துவிட்டுச் சாகத் துணிந்த மனம் அது. அந்த மனம் எளிதில் வராது தியாகத்தில் ஊறிப் பண்பட்ட மனம் அது குடிகார மகனாக இருந்தாலும் அவனுக்குக் கொடுத்துக் கொடுத்துச் செல்வத்தை அழிக்கத் துணியும் தாயின் மனம் அது. அதற்கு எவ்வளவு அன்பு வேண்டும்! எவ்வளவு தியாகம் வேண்டும்!" என்ற பகுதி துறவியான இளங்கோவடிகள் கண்ணகியின் கதையைக் காப்பியமாகப் பாடிய பெருமையைப் பேசுகிறது

தமிழிலும் இந்தியிலும் ஏவல்வினை அமைப்பு – ஓர் உறழ்நிலை ஆய்வு

டாக்டர். திருமதி. க. புஷ்பவல்லி,
மொழியியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தமிழ் ஏவல்வினையோடு இந்தி ஏவல்வினையை ஒப்பிட்டு பார்ப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழ், இந்தி ஆகிய இரு மொழிகளிலும் பலவிதமான வினைகள் உள்ளன. அவற்றில் வியங்கோள் வினை, ஏவல் வினை, நிபந்தனை வினை, வினை நிலையுரைத்தல், செயல்எஞ்சு வினை முதலியன முக்கியமானவையாகும். ஏவல் வினை மற்றவினைகளிலிருந்து மாறுபட்ட அமைப்புக் கொண்டது ஏவல் வினையில் வாக்கிய வினையடை (Sentence adverb) இல்லை. ஏவல் வினையில் காலங்காட்டும் உருபு இல்லை. தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களுள் இது முன்னிலை இடத்திற்கே உரியது. ஏனெனில் கட்டளைகள், வேண்டுகோள் முதலியன கேட்பவருடன் நேரடியான தொடர்புடையன. செயல்வினை (action verb) மட்டுமே ஏவல் வினையாகப் பயன்படுத்தப்படுகிறது ,, ஏவல் வினை எதிர் காலத்தில் நடக்கும் நிகழ்ச்சியை தெரிவிக்கிறது.

தமிழ் மொழியில் உள்ள ஏவல்வினை தனிவினையடியாகவோ அல்லது கூட்டு வினையடியாகவோ அமையலாம்.

	தமிழ்	இந்தி
தனிவினையடி எ—டு	நீ போ 'you go'	தூ ஜா 'you go'

தமிழ் மொழியில் கூட்டு வினையடி அமைக்க வேண்டுமானால் துணை வினையை இறந்த கால வினை யெச்சத்துடன் சேர்க்க வேண்டும்.

	தமிழ்	இந்தி
கூட்டு வினையடி எ—டு	நீ புரிந்து கொள் 'you understand'	தும் காலோ 'you eat'

இந்தியில் கூட்டு வினையடி அமைக்க வேண்டுமானால் "லோ" என்ற துணைவினையை தனிவினையடியுடன் சேர்க்க வேண்டும். இவ்விரு மொழிகளிலும் உள்ள ஏவல் வினைகளின் அமைப்பு அது வெளிப்படுத்தும் பல்வேறு குண இயல்புகளால் வேறு

படுகின்றது. ஏவல்வினை கட்டளையிடுவதிலும், வேண்டுகோள் விடுப்பதிலும், வழி காட்டுவதிலும் பயன்படுத்தப்படுகிறது. ஏவல் வாக்கியங்களில் குறைப்பு மாற்றிலக்கண விதியைக் (deletion transformation) கையாளலாம்.

எ—டு தமிழ் : நீ கதவை மூடு —> கதவை மூடு
'you shut the door' "Shut the door"
இந்தி தூ காநா காஓ —> காநா காஓ
"you eat the food" 'Eat the food'

தமிழ் மொழியின் ஏவல் வினையை அடிப்படையாக வைத்துக் கொண்டு, அதனோடு இந்தி ஏவல் வினையை ஒப்பிட்டு இவற்றிடையே காணும் ஒற்றுமை, வேற்றுமைகளைத் தெரிந்துகொள்ளலாம். தமிழ் ஏவல் வினையைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

1. ஒருமை ஏவல், 2. பன்மை ஏவல், 3. மரியாதை ஏவல், 4. பணிவு ஏவல், 5 வெறுப்பு ஏவல், 6 எதிர்மறை ஏவல்

ஒருமை ஏவல் : (Singulur Imperative)

தமிழிலும் இந்தியிலும் வினையடியே ஒருமை ஏவலாக அமைந்துள்ளது.

எ—டு தமிழ் நீ போ 'you go'
இந்தி தூ ஜா 'you go'

இவ்விரு மொழிகளிலும் ஒருமை ஏவல் அமைப்பு ஒன்றுபோல் உள்ளது. ஒருமை ஏவல் மிகவும் எளிய அமைப்புடையது. சம நிலையில் உள்ளவர்களுடனும், நெருங்கிய நண்பர்களுடனும், நிலையில் தாழ்ந்தவர்களுடனும் பேசுகையில் இது பயன படுத்தப்படுகிறது. தமிழில் வினையடியுடன் விளிச்சொற்களைச் சேர்த்து (அடா, அடீ) பணிவற்ற கட்டளை ஏவலை அமைக்கலாம்.

எ—டு தமிழ் வா + அடா > வாடா 'you come'
போ + அடீ > போடீ 'you go'

வாடா. போடீ முதலியன ஆணையும் பெண்ணையும் முறையே குறிக்கிறது.

பன்மை ஏவல் : (Plural Imperative)

தமிழ் மொழியில் வினையடியுடன் பன்மை உருபாகிய (உ)ங்கள் சேர்த்துப் பன்மை ஏவல் அமைக்கப்படுகிறது.

எ—டு தமிழ் நீங்கள் படி + உங்கள் > நீங்கள் படியுங்கள் " you (pl) read "

இந்தி மொழியில் பன்மை ஏவல் அமைக்க வேண்டுமானால் " ஓ " என்ற ஒருமை வினையடியுடன் சேர்க்க வேண்டும்.

எ—டு இந்தி தும் ஆஓ 'you (pl) come'

வினையடியுடன் " ஞ " என்ற செயல் எஞ்சு உருபை சேர்த்தும் பன்மை ஏவலை அமைக்கலாம்

எ—டு தும் ஆஞ " you (pl) come "

பன்மை ஏவல்

தமிழ்	இந்தி
1. நீங்கள் வாருங்கள் 'you (pl) come'	1. தும் ஆஓ " you (pl) come "
	2. தும் ஆஞ "

மரியாதை ஏவல் (Honorific Imperative)

தமிழில் வினையடியுடன் 'உம்' என்ற இடைச் சொல்லைச் சேர்த்து மரியாதை ஏவல் அமைக்கப்படுகிறது.

எ—டு தமிழ்: நீர் வா + உம் > நீர் வாரும் 'you (Hon) come'
இந்தி மொழியில் மரியாதை ஏவல் அமைக்க வேண்டுமானால் வினையடியுடன் " இயே " என்ற உருபை சேர்க்க வேண்டும்.

எ—டு இந்தி: ஆப் ஆயியே " you (Hon) come "
மரியாதை ஏவலில் தமிழ், இந்தி ஆகிய மொழிகளில் பயன் படுத்தப்படும் பிரதிப் பெயர்கள் முறையே நீர், ஆப் ஆகும்.

பணிவு ஏவல்: (Polite Imperative)

இதனைப் பொது ஏவல் (common imperative) என்றும் அழைக்கலாம். தமிழில் பணிவு ஏவலை அமைக்க " உம் " என்ற இடைச் சொல்லைச் செயல் எஞ்சு வினையுடன் (Infinitive) சேர்க்க வேண்டும்

எ—டு தமிழ்: நீ வர + உம் > நீ வரவும் 'please you come'
" ஏன் " என்ற இடைச் சொல்லை வினையடியுடன் சேர்த்தும் பணிவு ஏவலை அமைக்கலாம்.

எ—டு தமிழ்: நீ வா + ஏன் > நீ வாயேன் 'please you come'
இந்தி மொழியில் ஒருமை பணிவு ஏவலுக்குப் பன்மை ஏவலையே பயன்படுத்தலாம். தமிழில் பன்மை பணிவு ஏவல் அமைக்க

பன்மை ஏவலுடன் "ஏன்" என்ற இடைச் சொல்லைச் சேர்க்க வேண்டும்.

எ—டு தமிழ் நீங்கள் வாருங்கள் + ஏன் > நீங்கள் வாருங்களேன் "Please you (pl) come"

இந்தியில் பன்மை பணிவு ஏவலை அமைப்பதற்கு மரியாதை ஏவலுடன் எதிர்கால விகுதியாகிய 'கா" வைச் சேர்க்கவேண்டும்.

எ—டு இந்தி: ஆப் ஆயியே + கா > அப் ஆயியேகா 'please you (pl) come'

வெறுப்பு ஏவல்: (Contemptuous Imperative)

தமிழ் மொழியில் "தொலை" என்ற துணைவினையை இறந்த கால வினையெச்சத்துடன் சேர்த்து வெறுப்பு ஏவல் அமைக்கப்படுகிறது.

எ—டு தமிழ் நீ போய் + தொலை > நீ போய்த்தொலை 'you (cont) go'

இந்தியில் "மாரோ" என்ற துணைவினையை இறந்த கால வினையெச்சத்துடன் சேர்த்து வெறுப்பு ஏவல் அமைக்கலாம்.

எ—டு இந்தி: தூ ஆகர் மாரோ 'you (cont) go'

எதிர்மறை ஏவல் (Negative Imperative)

எதிர்மறை ஏவல் ஒருவனது செயலைத் தடுத்துரைக்கிறது. எதிர்மறை ஏவலைக் கீழ்க் கண்டவாறு பிரிக்கலாம்.

1. ஒருமை எதிர்மறை ஏவல்
2. பன்மை எதிர்மறை ஏவல்
3. பணிவு எதிர்மறை ஏவல்

ஒருமை எதிர்மறை ஏவல் (Singular Negative Imperative)

தமிழில் ஒருமை எதிர்மறை ஏவலை அமைக்கவேண்டுமானால் "ஆத்" என்ற எதிர்மறை இடைச் சொல்லைச் செயல் எஞ்சு வினையுடன் சேர்க்க வேண்டும்

எ—டு தமிழ்: நீ செய்ய + ஆத் + ஏ > நீ செய்யாதே '(you) do not do)

ஒருமை எதிர்மறை ஏவலின் விகுதியாக ' ஏ" அமைந்துள்ளது இந்தியில் "மத்" என்ற எதிர்மறை உருபை வினையடிக்கு முன்னால் அல்லது பின்னால் சேர்த்து ஏவல் அமைக்கப்படுகிறது.

எ—டு இந்தி : து மத் ஆ 'you do not come'
து ஆ மத் ,,

தமிழில் நீ வராதே என்பதை சம நிலையில் உள்ளவர்களுடனும், நண்பர்களுடனும். நிலையில் தாழ்ந்தவர்களிடமும், குழந்தைகளிடமும் பேசுகையில் உபயோகப்படுத்தலாம். ஆனால் இந்தியில் குழந்தைகளிடமும். நிலையில் தாழ்ந்தவர்களிடமும் பேசும்போது தூ மத் ஆ 'you do not come' என்றும் நண்பர்களிடமும். சமநிலையில் உள்ளவர்களுடனும் பேசும் போது தும் மத் ஆஓ 'you do not come' என்றும் பாகுபடுத்திக் கூறப்படுகிறது.

தமிழ்	இந்தி
1 நீ வராதே 'you do not come'	1 தூ மத் ஆ 'you do not come,
	2 தும் மத் ஆஓ ,,

இவ்விரு மொழிகளும் ஒருமை எதிர் மறை ஏவல் அமைப்பில் வேறுபட்டு காணப்படுகின்றன.

பன்மை எதிர்மறை ஏவல்:
(Plural Negative Imperative)

தமிழில் பன்மை எதிர்மறை ஏவல் ஒருமை எதிர்மறை ஏவலைப் போலவே அமைக்கப்படுகிறது. பன்மை எதிர்மறை ஏவலில் முன்னிலைப் பன்மை விகுதியாகிய 'ஈர்கள்' சேர்க்கப்படுகின்றது.

எ—டு தமிழ் : நீங்கள் செய்ய + ஆத் + ஈர்கள் >
நீங்கள் செய்யாதீர்கள் 'you (pl) do not do'

இந்தியில் "மத்" என்ற எதிர்மறை உருபை பணிவு ஏவல். பன்மை ஏவல் ஆகியவற்றுக்கு முன்னால் சேர்த்து பன்மை எதிர் மறை ஏவல் அமைக்கப்படுகிறது

எ—டு இந்தி ; தும் மத் ஆயியேகா 'you (pl) do not come'
தும் மத் ஆஓ 'you (pl) do not come'

மேலும் செயல் எஞ்சு வினைக்கு முன்னால் "மத்" சேர்த்தும் பன்மை எதிர்மறை ஏவலை உருவாக்கலாம்.

எ—டு இந்தி : தும் மத் ஆனா 'you (pl) do not come'

இந்தப் பன்மை எதிர்மறை ஏவல் பேச்சு மொழியில் காணப் படவில்லை.

(தொடரும்)